

சேலம் அம்மாபேட்டையில் அண்ணா நற்பணி மன்றத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 118 வது பிறந்த தினத்தையொட்டி மத்திய மாவட்ட கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் தலைமையில் அண்ணாவின் படத்திற்கு மாலை அணிவித்து சிறிய பால் உற்பத்தியாளர்கள் 200 பேருக்கு 5 லிட்டர் பால் கேன் வழங்கினர். உடன் மன்றச் செயலாளர் கே. குமாரசாமி, தலைவர் பொட்டு பி. ஞானசேகர், பொருளாளர் பொட்டு பி. சேகர் ஆலோசகர் கலைசெல்வன், ஆசிரியர் பி. செவ்வேல், சிவக்குமார், தொழில் அதிபர் ஆர். ஏ. ஆர் துரைசாமி, அருண்ராஜ், மாநகர அவைத் தலைவர் கே.ஆர். முருகன் பகுதி செயலாளர்கள். கேபிள் ராஜா கே. டி. ஆர். தனசேகர் ஆகியோர் இருந்தனர்.



தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டையில் உள்ள அவரது சிலைக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்க்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, த.சந்திரசேகரன், சுப.சரவணன், கீரை.தமிழ் ராஜா, அரு.வீரமணி, க.மதியழகன், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், ஆர்.செல்லத்துரை, எம்.எம்.பாலு, இராம.செல்வராஜ், கவிஞர் ஆ.மரிய எட்வின், மாலையிடு பிரபு, பிரேம் ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## முதல்வர் மருந்தகப் பெண் ஊழியர் கத்திக்குத்து:

# “சட்டம் - ஒழுங்கைச் சீரழிக்கும் த.வெ.க. அரசு”!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை,செப்.20-

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:



பண்ருட்டியில் முதல்வர் மருந்தகப் பெண் ஊழியர் மீது நடந்துள்ள கத்திக்குத்துச் சம்பவம் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. பட்டப்பகலில் கொலைகளும், வெட்டுக்குத்துகளும் நடப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள், ஏன் சிறைக் கைதிகளுக்குக் கூட பாதுகாப்பில்லை எனும் நிலையைத் தமிழ்நாட்டில் உருவாக்கி சட்டம் ஒழுங்கை தினமும் சர்வநாசம் செய்துகொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

பண்ருட்டி சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு உரிய மருத்துவச் சிகிச்சையும், பாதுகாப்பையும் அரசு வழங்க வேண்டும். குற்றவாளியின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம் - ஒழுங்கைப் பராமரிப்பதில் தாமதிக்காமல் இனியாவது இந்தப் பொறுப்பற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? இல்லை ரீல்ஸ் விளம்பரங்களில் மூழ்கிக் கிடந்து மக்களின் உயிரோடுதான் விளையாடுமா?

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு காவல்துறைக்கு கரூரில் கட்டுப்படாத விஜய்,லண்டன்

# காவல்துறையிடம் குட்டு வாங்கி சென்னை திரும்ப வேண்டுமா ?

### சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு சாடல்!

நெல்லை.செப்.20-

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு முறைப் பயணமாக வெளிநாடுகளுக்கு செல்லும் போதெல்லாம் அங்குள்ள தமிழர்களை சந்திக்க தனி நேரம் ஒதுக்கத் தவறியதில்லை.வட அமெரிக்காவில் FEDNA உள்ளிட்ட தமிழ் அமைப்புகளின் பிரமாண்ட வரவேற்பை ஏற்று, அவர்களுடன் கலந்துரையாடினார். அதேபோல் லண்டனிலும் தமிழ் உறவுகளைச் சந்தித்து,அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். பதவியின் உச்சத்தில் இருந்தாலும், உலகெங்கும் வாழும் தமிழர்களைத் தன் உறவுகளாக



அரவணைக்கும் பண்பும், பாசமும் கொண்டவர். மு.க.ஸ்டாலின் அவர்கள். என சட்டபேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் தனது பதிவில் கூறியிருப்பதாவது.

லண்டன் சென்ற முதல்வர் எந்த அனுமதியும் பெறாமல் லண்டன் வாழ் தமிழர்களை சந்திப்பதாக ரீல்ஸ் மூலம் விளம்பரபடுத்தி தமிழர்களை இவர் தங்கியிருந்த விடுதிக்கு முன் கூட வைத்து போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டதால்,லண்டன் காவல்துறை “உங்கள் CM” இந்தியா செல்ல முடியாது என்று கடும் எச்சரிக்கை விடுத்த நிலையில் முதல்வரின் பாதுகாவலர் ஒலிபெருக்கி மூலம் விஜய் உங்களை சந்திக்க விரும்பவில்லை திரும்பி போய் விடுங்கள் என்று லண்டன் வாழ் தமிழர்களை அவமானபடுத்தியும், தமிழ்நாடு காவல்துறைக்கு கரூரில் கட்டுப்படாத விஜய், லண்டன் காவல்துறையிடம் குட்டு வாங்கி அவமானப்பட்டு சென்னை திரும்ப வேண்டுமா CM சார்?

தமிழ்நாட்டில் 32 இடங்களில் செயல்பட்டு வரும் ஒரு நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்ய லண்டன் சென்றது போல் சென்னை நடிகரை கட்டி தழுவ லண்டன் சென்றது வெட்ககேடானது. தமிழ்நாட்டின் தரத்தையும்,முதலமைச்சர் பதவியையும் அவமரியாதை செய்யும் முதல்வரே உமக்கு இந்த பதவி ஒரு கேடா CMsir ?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் தஞ்சை கலைஞர் அறிவாலயம் வாயிலில் அலங்கரிக்கப்பட்ட பெரியார் திருவுருவ படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்ஏ தலைமையில் மாலை அணிவித்து சமூக நீதி நாள் உறுதி மொழி ஏற்றனர். இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநகரச் செயலாளர் சண். இராமநாதன், மாநகர மேயர் அஞ்சுகம் பூபதி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் முன்னோடிகள் பங்கேற்றனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் இளைஞர் அணி சமூகக் கல்வி அறக்கட்டளையின் சார்பில் சி.கவிமாறனுக்கு கல்விக்கு உதவும் வகையில் வழங்கப்பட்ட ரூ.25,000/க்கான காசோலையை மாநகர் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம்தேவ், கோவை அருண் முன்னிலையில் கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை செந்தமிழ் செல்வன் வழங்கினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், பகுதி கழகப் பொறுப்பாளர் சிவராமன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்தநாள் முன்னிட்டு அவரின் திருவுருவப் படத்திற்கு கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் மாலை அணிவித்து சமூகநீதிநாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன்,மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

## அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# தந்தை பெரியார் பிறந்தநாள் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

### சுபா.சந்திரசேகர் தலைமை!

அரியலூர்,செப்.20-

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்தநாளை முன்னிட்டு சமூக நீதிநாள் உறுதி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது!

அரியலூர் மாவட்ட திமுக சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148 வது பிறந்த நாள் விழா அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழிகாட்டுதலின்படி

கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில், மாவட்ட கழகத்தில் அலங்கரித்து வைக்கட்ட தந்தை பெரியார் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி, சமூக நீதிநாள் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள். சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, பூ. செல்வராஜ், மா.அன்பழகன், ரே.அசோக சக்கரவர்த்தி, கோ.அறிவழகன், ஆர். கலியபெருமாள் வி. எழில்மாறன், தனவேல், இரா. அண்ணாதுரை, தெய்வ.இளையராஜா, கே .ஜி.எஸ். முருகன் கணேசன், இரா, செந்தில்குமார், பொன். செல்வம்,

வீர.சிவா, நகரக் கழக செயலாளர் இரா,முருகேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, வி.எம். ஷாஜகான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.இராமராஜன், இரா.ரவிக்குமார், க.கருப்புசாமி, தலைமை கழக பேச்சாளர் கவிஞர்.வீரமுரசு, மாவட்ட பிரதிநிதி கு.பிரபாகரன், அரியலூர் நகர கழக நிர்வாகிகள் இராஜேந்திரன், மாலா.தமிழரசன், குணா, ராமு, சண்முகம், குமார், மணிவண்ணன், உத்திராபதி மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் 148வது பிறந்தநாளை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி நகர தி.மு.க. சார்பில் நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் தலைமையில் பெரியார் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. இதில் கழகத்தினர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி கே.வி.கே. சாமி
### செப்டம்பர் 20 (1956)



தி.மு.க. செயற்குழு உறுப்பினராகவும், திருநெல்வேலி மாவட்டக் கழகச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவராகவும் பணியாற்றியவர்.

1947ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நடைபெற்ற தி.க. மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணியாற்றியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தின்போது பங்கேற்று சிறை சென்றவர்.

தூத்துக்குடி நகரசபையின் உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**